Registered as News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    ஐப்பசி 15    (01 - 11 - 1991)    வெள்ளிக்கிழமை    ஓசை: 256

## 33,000 இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பத் திட்டம்

(டில்லி)

இந்தியாவிலுள்ள 33,000 இலங்கைத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கையில் குடிஅமர்த்துவதற்காக இரு நாடுகளும் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன என்று டில்லியில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் அனைவரையும் கப்பல்களில் அழைத்துவந்து திருமலைதுறைமுகத்தில் இறங்கச் செய்யவும், பின்னர் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் குடிஅமர்த்தவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்றும் அச் செய்திகள் தெரிவித்தன. இவ்வாறு அழைத்துவரப்படுபவர்கள் அடுத்த மாதத் [4 ஆம் பக்கம் பார்க்க]

# சமாதானமா அல்லது யுத்தமா?

# சார்க்கின் பின்னரே தீர்மானம்

## கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்து

(கொழும்பு)

தமிழர் தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமான அடுத்த கட்ட நடவடிக்கை அடுத்த வாரம் ஆரம்பமாகும் 'சார்க்' மாநாட்டின் பின்னரே தீர்மானிக்கப்படவிருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை மேற்கொள்வதா அன்றி இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்வதா என்ற முக்கிய தீர்மானம் இப்பிராந்திய மாநாட்டின் பின்னரே எடுக்கப்படலாமெனத் தெரியவருகின்றது.

சார்க் மாநாடு எதிர்வரும் 7 ஆம் திகதியிலிருந்து 9 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றது. இம் மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதில் சிறிலங்கா அரசு தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறது. பெரியதொரு அரசியல் நெருக்கடிக்கு முகம் கொடுத்து மீண்டுள்ள ஜனாதிபதி பிரேமதாசா இம் மாநாட்டை திறம்பட நடத்துவதன் மூலம் தனது அரசியல் அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். இம் மாநாட்டில் எவ்வித அசம்பாவித சம்பவங்களும் நிகழா வண்ணம் கொழும்பிலும் கண்டியிலும் மாபெரும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளார். இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளிலும் பல்லாயிரக்கணக்கான ஆயுதப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் அத்துடன் மாநாட்டில் கலந்து கொள்ளும் தலைவர்கள் பிர (4 ஆம் பக்கம் பார்க்க)

### மாவீரர் குறிப்பேடு

27.11.1982 முதல் 31.09.1991 வரை மண்மீட்புப் போரில் உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு 03.11.1991 முதல் ஈழநாதத்தில் வெளிவரவுள்ளது. பிரதிகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

## வெளியுறவுச்செயலாளர்கள் இன்று கொழும்பு வருவர்

- பிரட்மன்

(கொழும்பு)

சார்க் நாடுகளைச் சேர்ந்த வெளியுறவுச் செயலாளர்கள் ... விஜயம் மேற் கொள்வர் என்று

### புதிய கடற்படை தளபதியாக கிறிஸ்டி பெனாண்டோ

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் கிறிஸ்டி பெனாண்டோ நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

வைஸ் அட்மிரல் ஆனந்த சில்வா கடற்படைத்தளபதி (4 ஆம் பக்கம் பார்க்க)

## நரசிம்மராவ் உடன் திரும்ப பாதுகாப்பே காரணம்

(சென்னை)

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் கொழும்பில் குறுகிய நேரம் தங்கியிருப்பார் என்று இந்திய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொழும்பில் நடைபெறவிருக்கும் சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் கொழும்பிற்கு வந்தாலும் அவர் இருபத்தி நான்கு மணிநேரத்திற்குள் (4 ஆம் பக்கம் பார்க்க)

### கையிருப்பை அறியத் தரவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகலரித் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆதாரமற்ற குற்றச்சாட்டு விசாரணை கமிசன் தீர்ப்பு

(கொழும்பு)

இஸ்ரேல் ஒரே சமயத்தில் இலங்கை அரச படைகளுக்கும் தமிழ்ப்போராளிகளுக்கும் ஆயுதப்பயிற்சிவழங்கிய என்ற தகவல் ஆதாரமற்றது என்று ஜனாதிபதி பிரேமதாசா நியமித்த நீதிபதிகொண்ட பிட்டிய விசாரணைக் கமிசன் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

இஸ்ரேல் தமிழ்ப் போராளிகள் எவருக்கும் பயிற்சி வழங்கவில்லை என்பதையும் ஆனால் இலங்கை தனது உளவும் பிரிவை பலப்படுத்த வேண்டும் என்றும் பேற்படி விசாரணைக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

# வலம்புரியின் தந்திரம் தோல்வி;

# ராணுவதலைமைபீடம் குழப்பம்

விடுதலைப் புலிகளை மரபு ரீதியான போருக்கு இழுத்து அவர்களின் பலத்தை இழக்கச் செய்வதே ஒப்பரேசன் வலம்புரியின் பிரதான நோக்கம். ஆனால் இந்த இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தந்திரோபாயம் இராணுவ தலைமைப் பீடத்தைப் பெரி... கொண்டிருந்ததாகத் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளோ இந்த எதிர்பாரான யுத்த தந்திரோபாயத்தைக் கடைப்பிடித்ததனால் இராணுவ தலை...

மட்டக்களப்பில்

...கொடுத்து மீண்டுள்ள ஜனாதிபதி பிரேமதாசா இம் மாநாட்டை நிறம்பட நடத்...

...மேற்கொண்டுள்ளார். இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளிலும் பல ஆயிரக்கணக்கான...

## கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

நவம்பர் 7 ஆம் திகதிமுதல் 9 ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெறவிருக்கும் ஆறாவது 'சார்க்' உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வரும் இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, நேபாளம், பூட்டான் மற்றும் பங்களாதேஷ் நாடுகளின் தலைவர்களுக்கு மகத்தான வரவேற்பு அளிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்

(4ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

- பிரட்மன்

சார்க் நாடுகளைச் சேர்ந்த வெளியுறவுச் செயலாளர்கள் இன்று கொழும்பு வந்து சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கூறியுள்ளார். செய்தியாளரிடம் பேசிய அவர் மேலும் சார்க் நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் அடுத்த வாரமளவில் கொழும்பு விஜயம் மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப் படுவதாகவும் சார்க் நாடுகளின் அரசுத் தலைவர்கள் எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் கொழும்புக்கு வருகை தருவார்கள் என்றும் கூறினார்.

இதனிடையே சார்க் நாடுகளின் நிறைவேற்றுக்குழுவின் பதினாவது அமர்வு நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

...அவர்கள் பலத்தை இழக்கச் செய்வதே ஒப்பரேசன் வலம்...

## மட்டக்களப்பில் மேலும் ஒரு உ. அ. அ. பிரிவு

நிர்வாகம் பரவலாக்கும்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஏற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

...வடிக்கையின் போது ...லைப் புலிகள் மேற்கொண்ட தந்திரோபாயம் இராணுவ தலைமைப் பீடத்தைப் பெரிதும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளதாகக் கொழும்பில் இருந்து வரும் பத்திரிகைச்செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இது தொடர்பாகத் தகவல் வெளியிட்டுள்ள ஐலண்ட் பத்திரிகை ஒப்பரேசன் வலம்புரியின் நோக்கம் மரபுவழி இராணுவமாக வளர முற்பட்டுள்ள விடுதலைப்புலிகளை மரபுவழி மோதலுக்கு இழுத்து அவர்கள் பலத்தை இழக்கச்செய்வதன்மூலம் அரசியல் ரீதியாக கட்டுப்படுத்தக் கூடிய ஒரு கெரில்லாக்குழுவாகக் கட்டுப் படுத்துவதையே நோக்கமாகக்...

...ந்த எதிர்மாறான யுத்த தந்திரோபாயத்தைக் கடைப்பிடித்ததனால் இராணுவ தலைமைப்பீடம் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளதாம்.

புலிகள் தற்போதுள்ள பலமான நிலையில் இராணுவம் முகாம்களில் இருந்து நீண்ட தூரம் சென்று தேடி அழித்தல் நடவடிக்கை சாத்தியப்படாது என்றும் அவ்வாறு வடக்கில் செய்ய முனையின் அது விஷப்பரீட்சையாக அமைந்துவிடும் என்றும் இராணுவ தரப்பு அச்சமடைந்துள்ளதாம். இதன் காரணமாகப் புலிகளின் பலத்தை எவ்வாறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# உணவுப் பொருள்கள் சீரான விநியோகம்; நாங்கள் உறுதியாயுள்ளோம்

— மகேந்திராசா

(யாழ்ப்பாணம்)

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும், சீராகக்கிடைக்க வேண்டும் மக்களின் நியாயமானவையும், அத்தியாவசியமான தேவைகளையும் தீர்க்க நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா நேற்று மாலை இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது கூறினார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், உணவு இருந்தும் கூட உணவுப்பொருள்கள் சந்தையில் விற்பனையாகும் விலையைக் கொடுத்து வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அசாதாரணமான சூழ்நிலையில் அதிக விலை கொடுத்துப் பொருள்களை நுகர முடியாதவர்கள் தொகையும் சற்று அதிகரித்துள்ளது. உணவுப்பொருள்களின் விநியோகம் சீராக இருப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலகுவில் பொருள்கள்பெற ஒழுங்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

புதிய உணவு விநியோகத் திட்டத்தின் கீழ் அனைவரும் இலகுவில் அத்தியாவசிய உணவு வகைகளைக் கொள்வனவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாலையில் உணவு வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்பவர்கள் வசதி கருதி மாலை எட்டு மணி வரை அத்தியாவசிய உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் கடைகளைத் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தேநீர்க் கடைகளுக்கு விசேட அனுமதிப் பத்திரம்

(யாழ்ப்பாணம்)

தேநீர்க் கடைகள் வெளி மாவட்டங்களிலிருந்து வைத்தியசாலைகளிலிருந்து சிகிச்சை பெறுபவர்களின் உறவினர்கள் மற்றும் கடையப்பம் செய்பவர்களுக்கு விசேட அனுமதிப் பத்திரம் அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பெறுவ

(4ஆம் பக்கம் பார்க்க)

## வெளிமாவட். மாணவருக்கு பங்கீட்டு அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

உணவுப் பங்கீட்டு அட்டை இல்லாத வெளிமாவட்டப் பல்கலைக் கழகமாணவர்கள், கோக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கு பங்கீட்டு அட்டைகள் வழங்க ஒழுங்குகள் செய்யப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமணம் சாவீட்டிற்கு விசேட அனுமதி

திருமணவீடு, சாவீடு மற்றும் வைபவங்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## வகுப்பு தொழிலாளருக்கு இலவச உணவு

வகுப்புத் தொழிலாளர்களின் தொழிலும், வருமானமும் புதிய உணவுப் பங்கீட்டு முறையினால் பாதிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்குத் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் ஊடாக நிவாரணம் இலவசமாக வழங்கப்படும்.

## புலிகள் வேதாரணியம் வந்து போகின்றார்களாம்

(சென்னை)

வேதாரணியம் கடற்பகுதியில் கடற்படையினரின் காவல் தீவிரமாக இருந்தும் கூட விடுதலைப்புலிகளின்குழுவினர் வேதாரணியம் வந்து செல்கின்றனர். இவர்கள் வேதாரணியத்தில் இருந்து எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு கடத்திச் செல்வதற்கு வழிவகைகள் பற்றி ஆராய்வதற்கே வேதாரணியம் வந்து செல்வதாக யு.என்.ஐ. செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஊர்கா. ப.நோ.கூ. சங்கம் நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 'இ', 'உ' அட்டைகளுக்கான நவம்பர் மாதத்திற்கான நிவாரண உலர் உணவை விநியோகிக்கவுள்ளது.

மேற்படி சங்கத்தின் கிளைகள் யாழ். நகரில் திறக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 1, 4, 7 ஆம் கிளைகளுக்கு 4 ஆம் திகதிமுதல் 8 ஆம் திகதிவரையும், 2, 6, 8 ஆம் கிளைகளுக்கு 5 ஆம் திகதிமுதல் 9 ஆம் திகதி வரையும், 3, 9, 10 ஆம் கிளைகளுக்கு 6 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையும் 5, 6, 11, 13 ஆம் கிளைகளுக்கு 7-ம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையும் வழங்கப்படவுள்ளன. மேற்குறிப்பிட்ட திகதிகளுக்குப் பின் பொருள்கள் வழங்கப்படமாட்டாது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**பசுப்பால்**

தரமான பசுப்பால் மாலையில் வாங்க விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம். சமநல சேவைகள் நிலையக் கட்டடம். மீசாலை வடக்கு.

(B/3412)

## பதவி உயர்விற்கு ஒரே விதமான விதிகள்

(கொழும்பு)

சகல அரச ஊழியர்களுக்கும் ஒரேவிதமான விதிகளின் கீழ் பதவி உயர்வு மற்றும் இடமாற்றங்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த விசாரணை மேற்கொண்டிருந்த விமலதர்ம குழு இந்த சிபாரிசினை கொண்டுவந்தது என்றும், இக்குழுவினது பரிந்துரைகள் விரைவில் அமுல்படுத்தப்படும் என்றும் பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

## சைக்கிள் திருட்டு

(புங்குடுதீவு)

வீட்டிற்குள் வைக்கப்பட்டிருந்த சைக்கிள் திருடிச்செல்லப்பட்டுள்ளது. சென்ற ஞாயிறு (27 ஆம் திகதி) உரும்பராய் தெற்கிலுள்ள இராமலிங்கம் என்பவரது வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேற்படி வீட்டில் தங்கியிருக்கும் ஊ. பிரபாகரன் என்பவர் தனது சைக்கிளை வீட்டிற்குள் வைத்துவிட்டு உறங்கிய போதே அவரது 'கிறோ' சைக்கிள் திருடப்பட்டது (22)

## வங்கி ஊழியர் கலந்துரையாடல்

தென்மராட்சிப் பிரிவிலியங்கும் மக்கள் வங்கி, இலங்கை வங்கி உட்பட அரச திணைக்கள அதிகாரிகள், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்தில் இன்று (1.11 91) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்குறித்த அதிகாரிகள் ஊழியர்கள் அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலி


யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்

# மாங்குளம் தகர்ப்பு

[விவரணப்படம்]

# இனியொரு விதி

[குறும்படம்]

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்) சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

(B/3210)



யாழ்/ஆத்திசூடிக் கலைமகள் சனசமூக நிலையக் கலை - கலாசாரப் பேரவை வழங்கும்

நவாலியூர் சி. என். செல்லத்துரையின்

## கண்டியம்பதிக் காவலன்

என்ற சரித்திர நாடகம் 02-11-91 சனிக்கிழமை பிற்பகல் 8.00 மணிக்கு நடைபெறும்.

இடம்:- யாழ்/ஸ்கந்தவரோதயக் கைலாசபதி கலையரங்கு

நிர்வாகிகள்
ஆத்திசூடிக் கலைமகள்
ச.ச. நிலையம்.

அன்பளிப்பு: பிரியா சுவெலர்ஸ்

(R/1892)



## வனிக்கா மெடிக்கல்ஸ்

எமது ஸ்தாபனத்திற்கு மருந்துப் பொருள்கள் வரவுள்ளன. விற்பனை 6.11.91 இன் பின்பு ஆரம்பமாகவுள்ளது. தனியார் வைத்தியர்கள், வைத்தியசாலைகள், மருந்துச் சாலைகள் எம்மோடு குறிப்பிட்ட திகதியின் பின்பு தொடர்பு கொள்ளவும்.

வனிக்கா மெடிக்கல்ஸ்
274/2 ஆஸ்பத்திரி வீதி,


## பாஷையூர் மக்களுக்கு நிவார. வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ கடற்படையினரின் நடவடிக்கைகளால் தொழில் பாதிக்கப்பட்ட பாஷையூர் மக்களுக்கு நிவாரணம் வழங்கும்படி பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்க சனசமூகநிலையம் யாழ் அரசாங்க அதிபரிடம்வேண்டுகோள் விடுத்துள்ளது.

அண்மையில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையால் தீவகமற்றும் குடாக்கடல் பகுதிகளில் சிறிலங்காப்படையினரது நடமாட்டத்தினால் மீன் பிடித்தொழில் பாதிக்கப்பட்டதுடன் சில மீனவர்களும் படையினரால் கைது செய்யப்பட்டு அவர்களது உபகரணங்களையும் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மீன் பிடித்தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கும்படியும் கைது செய்யப்பட்டவர்களையும் கைப்பற்றப்பட்ட உபகரணங்களையும் மீட்டுத்தரும்படியும் கோரி மகஜர் ஒன்றை மேற்படி நிலையம் அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்திருக்கின்றது.

## நெடுந்தீவு மக்கள் சர்வதேசசெஞ்சிலுவையிடம் உதவி கோருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப்பகுதியில் உள்ள தமது உறவினர்களின் தற்போதைய நிலையை அறிவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவிபுரிய வேண்டும் என்று யாழ். நகரப் பகுதியில் தஞ்சமடைந்திருக்கும், நெடுந்தீவு மக்கள் கேட்டுள்ளனர்.

இவ்வாறு கோரி சுமார் ஐந்நூறுபேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

தாம் மீள நெடுந்தீவுப் பகுதியில் குடியமர்வது சம்பந்தமான நடவடிக்கையினை மேற்கொள்ளும் படியும் அந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

உதவிக்கல்விப் பணிப்பாளர் (வேலணைகோட்டம்) ஆர் சின்னத்தம்பியும் பாடசாலை அதிபர்கள் சிலரும் சேர்ந்து மேற்படி மகஜரை செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்தனர். (நி)

## பட்டதாரி ஆசிரியருக்கு 2050 ரூபா சம்பளம்

(கொழும்பு)

புதிதாக சேர்க்கப்படும் ஆசிரியர்களில் பட்டதாரிகளுக்கு 2050 ரூபாவும், ஏனையோருக்கு 1300 ரூபாவும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கணித விஞ்ஞான பயிலுனர் ஆசிரியர்களுக்கும் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுமான விண்ணப்பங்களை கல்வி அமைச்சு கோரியிருப்பது தெரிந்ததே.


## ஒத்துழைப்புக்கு நன்றி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இன்ரறக்ட் கழகத்தினராகிய எம்மால் 31-10-1991 அன்று இடம் பெயர்ந்தோருக்கான மதிய போசன உணவுப் பொதிகள் மக்க


## பாகிஸ்தானுக்கு பதிலாக சிறிலங்கா செல்ல விருப்பம்

(கொழும்பு)

பாகிஸ்தான் கிரிக்கெட் குழுவிற்காக இந்தியாவிற்குச் செல்ல சிறிலங்கா கிரிக்கெட் குழு விருப்பம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் குழுவின் இந்திய விஜயம் ரத்துச்செய்யப்பட்டதைத் தொடர்ந்தே தாம் அதில் பங்கு கொள்வதற்கு விரும்புவதாக சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இந்தியாவிடம் விருப்பம் தெரிவித்துள்ளது.


யாழ்ப்பாண மாநகரசபை

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பாவனையிலுள்ள துவிச்சக்கரவண்டிகள் அனைத்திற்குமான 1991 ஆம் ஆண்டுக்குரிய உரிமம் (லைசென்ஸ்) 15.11 91 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

இத்திகதிக்குப் பின்னர் வீதிகளில் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் போது ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்த்து உரியகாலத்திற்குள் உரிமங்களை பெற்று எம்முடன் ஒத்துழைக்குமாறு சகல துவிச்சக்கர வண்டி உரிமையாளர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 30.10.1991

(B/3413)


நினைவு கூருகின்றோம்...

1991 - 11 - 01





...3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்குறித்த அதிகாரிகள் ஊழியர்கள் அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்பு பிரிவினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## அறிவித்தல்

**விவசாய பீட 1-ஆம் வருட மாணவர்களுக்கு**

முதலாம் வருட இரண்டாவது அரையாண்டுக் கணித, ஆங்கில செய்முறைப்பரீட்சைகள் 1991 நவம்பர் மாதம் 11 ஆம் திகதி கிளிநொச்சி விவசாய பீடத்தில் ஆரம்பமாகும்.

ஏற்கனவே தீர்மானித்த படி முதலாம் அரையாண்டு (மீள் பரீட்சை) 18-11-91 இல் கிளிநொச்சி விவசாய பீடத்தில் ஆரம்பமாகும்.

மேற்குறிப்பிட்ட திகதிகளில் மாணவர்கள் கிளிநொச்சி விவசாய பீடத்தில் பிரசன்னமாகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

(B/3411)

---

வனிக்கா மெடிக்கல்ஸ்

274/2 ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

(B/3408)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின்மடியில்
24 — 02 — 1972
தாயக மண்ணில்
01 — 11 — 1990

**2 ஆம் லெப். மதுவன்**

(தவராசசிங்கம். விஜயசேகரன்)

மீசாலை தெற்கு

மணலாற்றுக் களந்தனிலே
மாட்சி பல செய்துவிட்டு
மன்னவனே மறைந்தனையோ
மறவேது மண்ணின் மீட்பனே
உனக்கொன்றும் மரணமில்லை
மரணம் உங்கள் காற்பாதம் பட்டு
மரணத்தை அணைக்கின்றது
காலன் உங்களின் கடும் வீரங்கண்டு
காலமாகிப்போகின்றான்
நீங்கள் வீழ்வதில்லை - வாழ்வீர்கள்
உங்கள் கரமணைந்த துவக்குகள் - அவை
இனி எங்கள் கரங்களிற் கனல் வீசும்
எதிரிகளை வினாவொடித்து எங்கள் தமிழ் மண்ணை
வெற்றி பெறும் மட்டும் நாம் ஓயோம்.

மீசாலை தெற்கு — குடும்பத்தினர்

(R/1877)

---

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இன்ரறக்ட் கழகத்தினராகிய எம்மால் 31-10-1991 அன்று இடம் பெயர்ந்தோருக்கான மதிய போசன உணவுப் பொதிகள் மக்களிடம் இருந்து பெற்று வழங்கப்பட்டது. இவ்வுணவுப் பொதிகள் யாழ்/இந்து மகளிர்கல்லூரியில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாமிற்கு வழங்கப்பட்டது. இச்சேவைக்கு ஒத்துழைப்பு நல்கிய மக்களுக்கு எமது நன்றிகள்.

இன்ரறக்ட் கழகம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

(B/3415)

---

## 1ம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
08.08.1967

வீரச்சாவு
01.11.1990

**மேஜர் சங்கர்**



(அரியரட்ணம் லவலோகிதன்)

தம்பலகாமம் — திருக்கோணமலை

(மணலாற்றில் சிறிலங்காப் படையினரின் மினி முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவு)

இருத்தலும் கூடுமோ
இனியும் இங்கொரு
ஆதிக்கக் கரமென
சீறினன் சங்கர் அங்கு —
மணலாற்று மண் மீது
மண்ணாகி ஒட்டியது படை முகாம் —.
ஒடுங்கி உள்வளைந்து
கிடந்த தமிழர் நெஞ்சு நிமிர்ந்தது காண்!

— திருமலை மைந்தன்

(R/1894)

---





**மேஜர் சங்கர்** **2ஆம் லெப். மதுவன்**

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் நாச்சிக்குடாவில் தரையிறங்கிய சிறிலங்காப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீரமரணமெய்திய

✱ வினோத் (ஆசிர்வாதம் அல்போன்ஸ் - 21/4, சென் - மேரிஸ்வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்)

முழங்காவில் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 10க்கு மேற்பட்ட பொதுமக்கள்

1990 ஆம் ஆண்டு இதேதினத்தில் மணலாற்றுப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் மினி முகாம் தகர்ப்பின் போது வீரமரணமெய்திய

மேஜர் சங்கர் (அரியரட்ணம் லவலோகிதன் - தம்பலகாமம் - திருமலை)

முசோலினி (ஆபிரகாம் தவசீலன் - 7ஆம் வட்டாரம், கட்டைபறிச்சான், திருக்கோணமலை)

2ஆம் லெப். மதுவன் (தவராஜசிங்கம் விஜயசேகரன் - மீசாலை தெற்கு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

✱ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் வினோத் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3409)

# தமிழீழத்தின் காணி உபயோகமும் விவசாய அபிவிருத்தியும் தொடர்பான கொள்கை

❋ சிந்தனைக்கு ❋

பொய்யை சரியென சொல்லும்போதுதான் தவறு இடம் பெறுகிறது.

— ஜே. ப்யூமான்ட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 01-11 1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 023 - 2839 நிர்வாகபீடம்: 2298
த.பெ.எண் 65

## வதந்திகள் திட்டமிட்ட செயல்

சுமார் ஒருவார காலமாக யாழ். குடாநாட்டில் பல வேறுவிதமான வதந்திகள் பரவி வருகின்றன. 'ஒபரேசன் வலம்புரி' இராணுவ நடவடிக்கை சிறிலங்கா இராணுவத்தினர் ஆரம்பித்ததில் இருந்து இவ் வதந்திகள் தீவிரமாக பரவியுள்ளன

'ஒபரேசன் வலம்புரி' இராணுவ நடவடிக்கையின் போது தந்திரோபாய ரீதியாக புலிகள் இராணுவத்தை தீவுப்பகுதியிலும், கௌதாரிமுனை - சங்குப்பிட்டிப் பகுதியிலும் எதிர்த்துப் பெரும் தாக்குதல்களில் ஈடுபடாததைத் தொடர்ந்து அதனை மையப்படுத்தி முக்கிய வதந்திகள் வெளிவரத் தொடங்கின

இவ் வதந்திகளில் சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையில் ரகசிய உடன்பாடுகள், திரைமறைவில் பேச்சுக்கள் இடம்பெறுவதாகவும் இதில் அமைச்சர் தொண்டமானின் பங்கு பெரியதெனவும், இப் பேச்சுவார்த்தைகள் உடன்பாடுகளின் காரணமாகவே தீவுப்பகுதியிலும், கௌதாரி முனை - சங்குப்பிட்டி பகுதிகளில் புலிகள் இராணுவத்தை எதிர்க்கவில்லை எனவும் வதந்திகள் பரவின. இவ் வதந்திகளின் உச்சக் கட்டமாக யாழ். செயலகத்தில் சிறிலங்காவின் தேசியக் கொடியும், விடுதலைப் புலிகளின் கொடியும் அருகருகே ஏற்றப்பட்டன / ஏற்றப்படவுள்ளன என்று அமைந்தது.

இவ் வதந்திகள் தனியாக பாமர மக்கள் மத்தியில் மட்டுமல்ல சகல தரப்பு மக்கள் மத்தியிலும் பரவியிருந்ததோடு அது தொடர்பாக சகல தரப்பு மக்களும் பேசிக் கொண்டமையே ஆச்சரியமளிக்கும் விடயமாகும்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்து அவர்கள் எப்பொழுதும் தமது கொள்கையினை வெளிப்படையாகத் தெரிவித்தே வந்துள்ளனர் இரகசியப் பேச்சுவார்த்தைகளோ, ஒப்பந்தங்களோ செய்ததாக அவர்களின் வரலாற்றில் இல்லை. தமது நிலைப்பாடுகளை திட

(நேற்றைய தொடர்)

இன்று நிலவும் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்து வைப்பதற்கு மார்க்சிச-லெனினிச கருத்துக்களை அப்படியே பயன்படுத்த முடியாது மார்க்சிசம் புனிதமானது - திருத்தப்பட முடியாதது என்று கருதத்தேவையில்லை. மார்க்சியத்தின் அடிப்படை நோக்கத்திற்கு முரணாகாத வகையில் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப மார்க்சியத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தி அதனை அபிவிருத்தி செய்து கொள்ளலாம்.

சீனாவின் உத்தியோகபூர்வ பத்திரிகையான மக்கள் தினசரி டிசம்பர் 7,1984இல் பின்வருமாறு குறிப்பிட்டது,

''மார்க்ஸ்'' 101 வருடங்களுக்கு முன் இறந்தார். அவரது படைப்புக்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் எழுதப்பட்டவை. அவரது கருத்தாக்கங்கள் உருவான பின்னர் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்க முடியும். மார்க்ஸின் சில கருத்துக்கள் இன்றைய சூழ்நிலைக்கு பொருத்தமானவை அல்ல. ஏனெனில் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் எவருமே இன்றைய காலகட்ட அனுபவங்களைப் பெற்றிருக்கவில்லை. இன்று நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவர்கள் ஒருபோதும் எதிர்நோக்கவுமில்லை. ஆகவே இன்றைய பிரச்சினைகள் அனைத்தையும் தீர்ப்பதற்கு நாங்கள் மார்க்சிய லெனினிய எழுத்துக்களைப் பயன்படுத்த முடியாது. காலம் மாறுகிறது ..

— ... சில மார்க்சிய கோட்பாடுகளை நாம் தொடர்ந்து பின்பற்றி வந்தால் எமது வரலாற்று ரீதியான முன்னேற்றம் நிச்சயம் பாதிப்படையும். ''

### எத்தகைய திருத்தங்கள் செய்வது

இந்நிலையில் சோஷலிசக் காணிகளும் அதன் மக்களுமே அந்த மூலவளங்களாகும். எனவே இவ்விரண்டு வளங்களையும் முழுமையாகவும் உத்தமமானமுறையிலும் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலான விவசாயக் கொள்கையினையும் அபிவிருத்தித் திட்டங்களையும் வகுத்தல் வேண்டும். காணி என்பது ஒரு தேசிய மூலவளம். எங்கு அமைந்திருந்தாலும் காணி என்பது மிகப் பெறுமதி வாய்ந்ததும் வரையறுக்கப்பட்டதுமான ஒரு மூலவளமாகும் பன்னெடுங்காலமாக மனித சமுதாயத்தின் வாழ்க்கை அதன் முன்னேற்றம் என்பனவற்றுடன் காணி நெருங்கிய தொடர்புடையதாக இருந்துவந்துள்ளது இதனால் காணிதொடர்பான கொள்கைகளும் அவற்றின் விளைவாக எழுந்த பிரச்சினைகளும் மனித சமூகத்தில் மிக முக்கியமான இடத்தினை வகித்து வந்துள்ளன. காணிப் பிரச்சினையை சரியானமுறையில் கையாள்வதன் மூலமே ஆள்பவர்களினதும் ஆட்சிகளினதும் சமூக பொருளாதாரமுறைகளினதும் வெற்றி தோல்விகள் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதனை கடந்தகால வரலாறு பல்வேறு தடவைகள் எமக்கு எடுத்துக் காட்டியுள்ளன. காணிப்பிரச்சினையை சரியான முறையில் கையாளாமல் விட்டமையும் அதன் விளைவாக விவசாயக் கொள்கைகள் தோல்வியடைந்தமையும் போன்றவையே இன்றைய சோசலிச நாடுகளில் தலையெடுத்துள்ள நெருக்கடிகளுக்கு பிரதான காரணங்களாகும். காணிப் பிரச்சினை பற்றிப் போதியளவு அக்கறை காட்டப்படாவிடில் அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, வேலையின்மை, மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துதல் ஆகியவற்றிற்காக நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியடையும்.

விட்டு வெளியில் போகவும் முடியாது. அவர்கள் கொள்வனவு செய்யக்கூடிய பொருட்களுக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டிருந்தது. விதிக்கப்பட்ட அளவிற்கு மேலாக ஒரு சிறிய பொருளைக்கூட கொள்வனவு செய்யமுடியாது, இத்தகையதொரு நிலையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஆர்வத்தினை ஊக்கத்தினை விவசாயிகளிடமிருந்து எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

### லெனின் புதிய பொருளாதாரக் கொள்கை

1921 ஆம் ஆண்டு புதிய பொருளாதாரக் கொள்கையை லெனின் அறிமுகம் செய்த போது பின்வருமாறு கூறினார்: ''சிறிய விவசாயிகளுக்கு ஊக்குவிப்பை வழங்குவதே அடிப்படையான விடயம். நிலத்தை உழுவதற்கு அவர்கள் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.'' எனவே உழைப்பவனுக்கே நிலம் என்ற தாரக மந்திரத்தினை அடிப்படையாகக் கொண்டு காணிகளின் உண்மையான உடைமையாள

வரதராஜன்

ராக மக்கள் காணப்படும் நிலை தோற்றுவிக்கப்படுதல் வேண்டும். விவசாயிகளை காணியின் எசமானர்களாக ஆக்குதல் வேண்டும். கூலிக்கு வேலை செய்பவனாக அன்றி எசமானாக இருந்தால் மட்டுமே விவசாயி காணியை அறிவார்ந்த ரீதியில் பயன்படுத்துபவனாக இருப்பான்.

எனவே இக்கருத்துக்களின் பின்னணியிலேயே தமிழீழத்திற்கான காணி - விவசாயக் கொள்கையினை வகுத்தல் வேண்டும். பெறுமதி வாய்ந்ததும் வரையறுக்கப்பட்டதுமான காணி வளத்தினை திட்டமிட்ட முறையில் உபயோகிக்கவேண்

ளவு காணிகளைப் பயன்படுத்துவது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.

4. பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்படக்கூடிய காணியின் அளவுகளை மாவட்ட ரீதியாக தெரிந்தெடுத்தல் வேண்டும்.
5. இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட காணிகளைப் பயன்படுத்துவது தொடர்பான கொள்கையினை வகுத்தல் வேண்டும். அதாவது இக் காணிகளில் பயிர்ச்செய்கையினை மேற்கொள்வது யார் எனத் தீர்மானித்தல் வேண்டும். அதாவது தனியார் நில உடமையா? அரச நில உடமையா? என்பதனைத் தெரிவு செய்தல் வேண்டும் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று நில உடமையில் அரசு தனியுரிமை வகிப்பது என்பது விரும்பத்தக்கதாக தோன்றவில்லை. ஆனால் அதேவேளையில் தனியார் துறையிடம் கட்டுப்பாடற்ற முறையில் நில உடமையை ஒப்படைப்பதும் தவறானதாகும். எனவே அரச கட்டுப்பாடுள்ள தனியார் நில உடமையே பொருத்தமானதாகும். இது தொடர்பாக பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றலாம்.

### நில உடைமைபற்றிய நடைமுறைகள்

அ) நில உச்சவரம்பு ஒன்றினை விதித்தல், நெல் வயலுக்கு ஒரு உச்ச அளவும், மேட்டு நிலங்களுக்கு வேறு ஒரு உச்ச அளவும் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

ஆ) உச்ச வரம்பிற்கு மேற்பட்ட காணிகள் அனைத்தும் அரசுடைமையாக மாற்றப்படுதல் வேண்டும்.

இ) இவ்வாறு அரசுடைமையாக

...தளை
...ம்

...டும் இலங்
...களை மேற்
...ரிவிக்கின்றன.
...லதுறைமுகத்
...டி அமர்த்தவும்
...த்தன. இவ்
...ம் பார்க்க)

...ஓசை: 256

...திரும்ப
...ரணம்

அவர் இருபத்தி
...மணிநேரத்திற்குள்
...பக்கம் பார்க்க)

...யிருப்பை
...பத் தரவும்
...ழ்ப்பாணம்)
...ர் உதவி அரசாங்க
...விலுள்ள சகலரைத்
...பக்கம் பார்க்க)

...றச்சாட்டு
...ா தீர்ப்பு

...ல் தமிழ் பேரா
...வருக்கும் பயிற்சி
...லை என்பதையும்
...இலங்கை தனது உள
...வைப்பலப்படுத்த
... என்றும் மேற்படி
...க் குழுவினர் அறி
...னர்.

...தோல்வி;

...ழப்பம்

...ருந்ததாகத் தெரிவித்த

...லைப் புலிகளோ இத
...மாறான யுத்த தந்
...யத்தை கடைப்பிடித்
... இராணுவ தலை

தெரிவித்தே வந்துள்ளனர். இரகசியப் பேச்சுவார்த்தைகளோ, ஒப்பந்தங்களோ செய்ததாக அவர்களின் வரலாற்றில் இல்லை. தமது நிலைப்பாடுகளை திட்டவட்டமாக அவர்கள் மக்கள் முன் வெளியிட்டு வந்துள்ளனர். சிறிலங்காவுடன் சரி, இந்தியாவுடன் சரி அவர்களின் கொள்கை வெளிப்படையானதாகும். இதனை அவர்கள் இப்பொழுதும் கடைப்பிடித்தும் வருகின்றனர்.

இந்நிலையில் புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் இரகசிய உடன்பாடு, பேச்சுவார்த்தை என வதந்திகள் பரப்புவது விஷமிகளின் / துரோகிகளின் திட்டமிட்ட சதி வேலையாகும். மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி போராட்ட உணர்வை மழுங்கடிக்க மேற்கொள்ளும் நடவடிக்கையும் ஆகும்.

அதேவேளை வதந்திகளை ஒரு சில விஷமிகள் விதைக்க அதனை முன் பின் யோசனையின்றி காவிச் செல்பவர்கள் யதார்த்த நிலைபற்றி எள்ளளவும் சிந்திக்காதவர்களே ஆகும். சிறிலங்கா சிங்கள அரசாங்கம், வடக்கில் இராணுவ வெற்றியைக் குவித்துவிட்டது என்பதனைப் பிரசாரம் செய்வதற்காக ஒரு முற்றுகைக்கு உள்ளாகக் கூடிய நிலையை எந்த ஒரு விடுதலை இயக்கம் ஏற்றுக் கொள்ளும்? அதேவேளை இரகசிய உடன்பாட்டின் மூலம் முன்னேறி கேந்திர இடங்களில் நிலைகொள்ளும் இராணுவம் பின்னர் விலகிச் செல்லும் என்பதற்கு யார் உத்தரவாதம்? இதை யார் நம்புவது. இவற்றை யார் தான் ஏற்றுக் கொண்டாலும் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்வதென்பது கற்பனைக்கும் அப்பாற்பட்டது.

இதற்கும் மேலாக தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினையை சிங்கள மக்களுக்கு எடுத்துச் சொல்லி விளங்க வைத்து பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணாமல் சிங்கள மக்களை ஏமாற்றி ஒரு அரசியல் தீர்வு காண முடியும். தற்கொலைக்கொப்பான இவ் விடயத்தை சிங்கள பேரினவாத அரசாங்கம் செய்யும் எனவும் எதிர்பார்ப்பது எவ்வளவு பேதைமை. அத்தோடு சிங்கள மக்களை ஏமாற்றிவிட்டு மறைமுகப் பேச்சுவார்த்தைகளை புலிகளுடன் நடத்த சிறிலங்கா எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் எவரும் இளிச்சவாயர்களும் அல்ல.

இதேவேளை இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று சிறிலங்கா பேச முற்படுமேயானால் அது சாத்தியப்படப் போவதில்லை என புலிகள் தொடர்ந்து எச்சரித்தே வருகின்றனர். இந்நிலையில் வடக்கில் இராணுவ மேலாதிக்க நிலை ஒன்றை உருவாக்குவதற்கு வழி செய்யக் கூடியதான இராணுவ நடவடிக்கைக்கு அவர்களின் மறைமுக அங்கீகாரம் உள்ளதெனப் பேசுவது புலிகளின் வரலாற்றையும், அவர்களின் நடவடிக்கையையும் விளங்கிக் கொள்ளாதவர்களின் அறியாத்தனமான பேச்சு.

## திருத்தங்களை செய்வது

இந்நிலையில் சோஷலிசக் கொள்கையினை முற்றாகக் கைவிடுவது அல்ல நமது முடிவு. இன்று பொருளாதாரம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கு சோஷலிசக் கொள்கையினை எத்தகைய திருத்தங்களோடு பயன்படுத்த முடியும் என்பதே எம்முன் உள்ள சிந்தனையாகும். தூய முதலாளித்துவக் கொள்கையோ அல்லது தூய சோஷலிசக் கொள்கையோ இன்றைய பொருளாதார நெருக்கடிகளை தீர்க்கப் பயன்பட மாட்டா என்பது அனுபவ ரீதியாக நிரூபிக்கப்பட்டு விட்டது. தலைசிறந்த சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதே எமது குறிக்கோள். தெரிந்த மாற்றுவழிகள் எதுவும் சாத்தியமற்றது என்பது நிரூபணமாகி விட்டது. எமக்கு இன்றுள்ள ஒரேயொரு மாற்றுவழி ஒளிமயமான எதிர்காலம் குறித்து புதிய சிந்தனை ஒன்றை ஆரம்பித்து வைப்பது தான் எனவே சிறந்த சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு வழிகோலக்கூடிய புதிய பொருளாதார சிந்தனையொன்றை கட்டியெழுப்பும் மாபெரும் பணி நம் அனைவரையும் சார்ந்ததாகும். போர் முறையில் ஒரு புதிய முறையினை உலகிற்குக் கற்றுக் கொடுத்த தமிழீழம் பொருளாதார முறையிலும் ஒரு புதிய முறையினை உலகிற்கே கற்றுக் கொடுக்கட்டும்.

இதன் முதற்கட்டமாக தமிழீழத்தின் விவசாய பொருளாதார கொள்கையினை வகுத்தல் வேண்டும். எந்தவொரு நாட்டிற்கும் இறுதியாக இரண்டு மூலவளங்கள் காணப்படுகின்றன. அந்த நாட்டின்

...திற்காக நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியடையும்.

நாட்டின் செல்வங்கள் குறிப்பாகக் காணிகள் அந்நாட்டு மக்களுக்கே சொந்தமாக இருக்க வேண்டும் என்பதில் இரண்டு வேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால் மக்கள் என்பது அரசாகாது. செல்வங்கள் தேசத்திற்கு மக்களுக்கு உடைமையாக உள்ளது என்பதும் அவை அரசுக்கு உடைமையாக உள்ளது என்பதும் வேறுபட்டவையாகும். இவ்வேறுபாட்டினை விளங்கிக் கொள்ள முடியாத நிலையிலேயே இன்றைய சோஷலிச நாடுகளின் பொருளாதார நெருக்கடிகள் தோன்றியுள்ளன. எந்த மூலவளமும் தனி ஒருவனின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பது விரும்பத்தக்கதல்ல. அவ்வாறு ஆதிக்கம் செலுத்துபவர் அரசாக இருந்தாலும் சரி, தனியார் துறையாக இருந்தாலும் சரி அது விரும்பத்தக்கதல்ல. ஆனால் இன்று சோஷலிசம் என்ற பெயரில் அரசே நாட்டின் மூலவளங்கள் மீது தனியுரிமை செலுத்துகின்ற நிலைமை உள்ளது. உண்மையில் நாட்டின் மூலவளங்கள் மக்கள்மயப்படுத்தப்படுவதே உண்மையான சோஷலிசமாகும். ஆனால் இன்றைய சோஷலிச நாடுகளில் உற்பத்திச் சாதனங்களிலிருந்து மக்கள் அந்நியப்படுத்தப்பட்டுள்ளனர். சோவியத்யூனியனில் உள்ள கூட்டுப்பண்ணை முறை விவசாயிகளை நாள் கூலிகளாக மாற்றி விட்டது. உண்மையில் இந்த விவசாயிகளுக்கு வயது முதிர்ந்த காலத்தில் ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை. அவர்களுக்குக் கடவுச் சீட்டுக்கள் கிடையாது. அத்துடன் அனுமதி பெறாது அவர்கள் தமது கிராமங்களை

...பட்டதுமான காணி வளத்தினை திட்டமிட்ட முறையில் உபயோகிக்கவேண்டியது அவசியமாகும். ஒருங்கிணைப்பின்றியும் திட்டமிடப்படாத முறையிலும் நிலங்களை உபயோகித்தால் அவ் இயற்கைவளம் நிரந்தரமாகப் பாதிக்கப்படுவது மட்டுமின்றி மனிதவளம், மூலதனவளம் என்பனவும் வீணாக்கப்படுகின்றன. எனவே ஒவ்வொரு சிறிய துண்டுக் காணியும் அதற்குரிய சரியான உபயோகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதனையும் விஞ்ஞான பூர்வமாக சரியாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்தக் கூடிய வகையில் ஒருவிரிவான காணி உபயோகக் கொள்கையினை உருவாக்குதல் வேண்டும்.

இக் கொள்கையினை உருவாக்கும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

1. தமிழீழத்தில் காணப்படும் காணிகளை இனம் காணுதல் வேண்டும். அதாவது தமிழீழத்தில் காணப்படும் காணிகளுள் தனியார் காணிகள், அரசகாணிகள் என்பனவற்றை இனம் காணுதல் வேண்டும்.
2. மண்வளம், நீர்வளம், காலநிலை என்பவற்றின் அடிப்படையில் காணிவளம் ஆராயப்பட்டு பிரதேச ரீதியாக அவை அட்டவணையிடப்படல் வேண்டும்.
3. இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு காணிகளை எந்தெந்தத் தேவைகளுக்கு உபயோகிக்கலாம் என்பதனைத் தீர்மானித்தல் உதாரணமாக காடு வளர்ப்பு, பயிர்ச்செய்கை, வீடமைப்பு, நகர்ப்புற அமைப்பு போன்ற தேவைகளுக்கு எவ்வாறு எந்த

மாற்றப்படுதல் வேண்டும்.

இ) இவ்வாறு அரசுடைமையாக மாற்றப்பட்ட காணிகள் அனைத்தும் சமூகத்திடையே மறுபகிர்வு செய்யப்படல் வேண்டும்
1. காணியற்றவர்களுக்கு வழங்குதல்.
2. மிகவும்குறைந்தளவிலான காணிகளை உடையவர்களுக்கு அதனை பெருப்பித்து வழங்குதல்.

ஈ) காணியினை மறு பகிர்வு செய்யப்படும்போது வழங்கப்படும் காணியின் அளவினைக் கவனமாகத் தீர்மானித்தல் வேண்டும் பொருளாதார ரீதியில் சாத்தியவளம் கொண்டிராத அளவுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் காணியின் அளவு சிறிதாக இருக்குமேயானால் இச்செயற்பாடு தோல்வியை தரும் உயர்ந்த உற்பத்தித் திறன், கிராமிய வறுமையினை நீக்குதல் வேலையின்மை பிரச்சினையை நீக்குதல் என்பன காணிப் பகிர்வின் இலக்குகளாகும். ஆனால் பகிர்ந்தளிக்கப்படும் காணியின் அளவு சிறிதாக இருக்குமிடத்து இந்த இலக்குகளை அடைவது சாத்தியமற்றதாகும். மேலும் இவ்வாறு சிறியகாணித்துண்டுகளைப் பெற்றுக் கொள்வோர் அதன் மூலம்தமது வாழ்க்கைக்குத் தேவையானவருமானத்தைப்பெற முடியாது போகும் போது அவற்றை ஈடுவைக்கும் நிலை உருவாகும். இதன் விளைவாக இறுதியில் குறைந்த எண்ணிக்கை கொண்ட தனியாட்கள் பெருமளவில் காணிகளை உரிமை கொள்ளும் நிலைமை உருவாகும்.

(தொடரும்)

...மாறான யுத்த தந்
...யத்தை கடைப்பிடித்
இராணுவ தலை
...ம் பெரும் குழப்பத்
...ந்துள்ளதாம்.
...தற்போதுள்ள பல
...லையில் இராணுவம்
...வில் இருந்து நீண்ட
...சென்று தேடி அழித்
...வடிக்கை சாத்தியப்
என்றும் அவ்வாறு
செய்ய முனையின்
...ப்பரீட்சையாக அமை
என்றும் இராணுவ
...ச்சமடைந்துள்ள
இதன் காரணமாகப்
...ன் பலத்தை எவ்வாறு

...ம் பக்கம் பார்க்க)

## ...ரணியம்

## ...ர்களாக

...ருள் மற்றும் அத்தியா
...பொருள்களை யாழ்ப்
...துக்கு கடத்திச் செல்வ
...ழிவகைகள் பற்றி
...வதற்கேவேதாரணியம்
...சல்வதாக யு. என் ஐ.
...ள் தெரிவிக்கின்றன.

## ...கூ. சங்கம்

## ...யோகம்

...,6,8 ஆம் திகதிகளுக்கு
...கதிமுதல் 9 ஆம் திகதி
..., 3 9,10 ஆம் திகதி
6 ஆம் திகதி முதல்
...திகதி வரையும் 5,6,
...ஆம் திகதிகளுக்கு 7-ம்
...முதல் 11 ஆம் திகதி
...ம் வழங்கப்படவுள்
...நேர்குறிப்பிட்ட திகதி
...ப் பின் பொருள்கள்
...ப்படமாட்டாது.

...ம் பக்கம் பார்க்க)

## விவசாயக் கல்லூரிக்கு விண்ணப்பம்கோரப்படுகிறது

(கொழும்பு)

குண்டசாலை விவசாயக் கல்லூரியில் 92/94 ஆம் கல்வி ஆண்டில் விவசாய டிப்ளோமாவுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக விவசாய திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

போட்டிப்பரீட்சை ஒன்றின் மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், விவசாயம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறுபாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

டிசம்பர் 13 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும் என்றும் மேலதிக விபரங்களுக்கு ஒக்டோபர் 13ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் மூன்றாவது சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணியளவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## கணித, விஞ்ஞான ஆசிரியருக்கு வடக்கு கிழக்கில் வெற்றிடம் அதிகம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணம், ஊவாமாகாணம் மற்றும் வட மத்திய மாகாணம் ஆகிய பிரதேசங்களில் கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான அதிகமான வெற்றிடங்கள் இருப்பதாகவும் இம்மாகாணங்களில் நியமனம் பெற விண்ணப்பிப்பவர்களுக்கு நியமனம் கிடைக்கக்கூடியவாய்ப்புகள் கூடுதலாக உள்ளன என்றும் கல்விச் சேவைகள் குழு அறிவித்துள்ளது.

இவர்கள் மாகாண உதவி அரசாங்க அதிபர், கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களுக்கு ஏற்ப தெரிவு செய்யப்படுவர் என்றும்,

ஆனாலும் தாம் வசிக்கும் மாகாணங்களுக்கு மட்டுமல்ல வேறு மாகாணத்திலும் நியமனம் பெற விண்ணப்பிக்க முடியும் என்றும்.

குறிப்பாக மேற்படி மாகாணங்களில் நியமனம் பெற விண்ணப்பித்தால் நியமனம் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் உண்டு என்றும் கல்விச்சேவைகள் குழு அறிவித்துள்ளது.

அத்துடன் இவர்கள் மாகாண அரசாங்க சேவையின் கீழ் நியமனம் பெறுவர் என்றும் போட்டிப் பரீட்சை புள்ளிகளின் அடிப்படையிலேயே இவர்கள் தெரிவு செய்யப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அந். செலாவணி கொள்கை; மத்திய வங்கி தளர்த்தியது

இலங்கை மத்திய வங்கி தனது அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டுக் கொள்கையை இன்றுமுதல் மேலும் தளர்த்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

இதற்கான அறிவிப்பை மத்திய வங்கியின் ஆளுநர் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இதன்படி வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்குச் செலாவணியாக 2500 டொலர்கள் (சுமார் ஒரு லட்சம் ரூபாய்) வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த முறை இன்றுமுதல் அமுல்படுத்தப்படும் என்றும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்தார்.

## தமிழக முதல்வருக்கு மத்திய அமைச்சர் பாராட்டு

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா விடுதலைப் புலிகள் இயக்கத் தீவிரவாதிகளை விரட்டுவதில் தீவிர அக்கறை காட்டி தேசிய சேவை புரிந்து வருகின்றார் என்று மத்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் கிருஷ்ணகுமார் பாராட்டியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய கிருஷ்ணகுமார் இந்தப் பாராட்டைத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் தமிழக அரசிற்கு இதற்காக மத்திய அரசிடம் இருந்து உதவியும் ஒத்துழைப்பும் தொடர்ந்தும் வழங்கப்படும் என்றும்.

இதேபோன்று அனைத்துத் தரப்பினரும் முதலமைச்சருக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## கோர ரயில் விபத்து; 35 பேர் பலி; 100 பேர் காயம்

(பெங்களூர்)

பெங்களூருக்கு அருகேஇடம்பெற்ற ரயில் விபத்தொன்றில் 35 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்றும், 100 பேர் வரை காயமடைந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கல் ஒன்றுடன் மோதியதடம் புரண்டதாகவும்,

எஞ்ஜின் உட்பட இருபது பெட்டிகள் சேதமுற்றதாகவும் 35 பேர் வரையில் உயிரிழந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### இலங்குவில்

## மட்றிட் சமாதான மாநாட்டில் முன்னேற்றம் எதுவுமில்லை

(மட்றிட்)

நிலம், உரிமைகள், பாதுகாப்பு ஆகிய பிரச்சினைகள் அரபு இசுரேலிய தலைவர்கள் கூடிய கவனம் செலுத்தி வருவதாக மட்றிட்டில் இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. அதேவேளை லிபியாவிலும், லெபனானிலும் ஆயிரக்கணக்கானோர் சமாதான மாநாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்துஆர்ப்பாட்டங்களை நடாத்தியுள்ளனர் மட்றிட்டில் இசுரேலும், அதன் அயல் நாடுகளான அரபு நாடுகளும் முற்றிலும் நேர் எதிரான கோரிக்கைகளை முன் வைத்திருப்பதாகவும்,இவை கொடர்பாக எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இசுரேல் ஆக்கிரமித்த பிரதேசங்களில் யூதக்குடியேற்றங்களை உடன் நிறுத்த வேண்டுமென ஐரோப்பிய சமூக நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன ஆனால்பேச்சுவார்த்தைகளில் இசுரேல் ஆக்கிரமித்த பகுதிகளை மீட்பதில் மட்டும் அரபு எதிரிகள் கவனம் செலுத்துவார்களேயானால் மாநாட்டில் எந்த வித பயனும் இருக்கப் போவதில்லையென இசுரேலியப் பிரதமர் சமீர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரதேசங்களைப் பற்றிப் பேசாவிட்டால் வேறு எதைப் பற்றித்தான் பேசுவது என பாலஸ்தீனியத்தூதுக்குழுவின் அதிகாரி பொருள் கேள்வி எழுப்பியுள்ளார்.

## தென் ஆபிரிக்காவிற்கு எதிரான தடைகளைஇந்தியாநீக்கியது

(டில்லி)

ஹராரே பொதுநலவாய உச்சி மாநாட்டு முடிவுகளுக்கு ஏற்ப தென் ஆபிரிக்காவிற்கு எதிரான சில தடைகளை நீக்குவதென்று முடிவு செய்துள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

விளையாட்டுப் போட்டிகளில் காட்டிவந்த புறக்கணிப்பு நடவடிக்கைகளையும் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச்சென்று திரும்புவதற்கான பயண வசதியின் மீது விதித்திருந்த தடைகளையும் நீக்குவதென்றும் இந்தியா தெரிவித்துள்ளது.

## மின்சாரசபை ஊழியர் கலந்துரையாடல்

சுன்னாகம் மத்திய மின் நிலைய ஊழியர்கள் உட்பட இலங்கை மின்சாரசபை வட பிராந்திய சகல ஊழியர்களும் 1991-11-04 ஆம்திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு சுன்னாகம் யாழ். பிரதேச பொறியியலாளர் காரியாலயத்தில் ஓர் கலந்துரையாடலுக்குச் சமுகமளிக்குமாறு பிரதிப் பொதுமுகாமையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மட்டக்களப்பு

துறை நீலாவணை முதல் கோட்டைக்கல்லாறு வரையிலுள்ள பிரதேசங்களை உள்ளடக்கி கல்லாறு உதவி அரசாங்க அதிபர் பிரிவு என்று ஒரு புதிய பிரிவு ஏற்படுத்தப்படவுள்ளது.

### 33,000 இலங்கை

தில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்படுவார்கள் என்றும்.

முதலில் 500 பேர் வீதமும் பின்னர்ஒரேதடவையில் 2000 பேர் வரை அனுப்பப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது

ஊர்காவற்று ப. நோ. கூ. சி.

இதேவேளை ஜெஸிமா பீக் சர் வலனில் 1, 2, 3, 5, 13 ஆகிய இலைகளும், ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் 4, 6, 9, 7, 8, 10, 11 ஆகிய இலைகளும், புளியனை வீதி சி.எஸ். கே கட்டடத்தில் உ' ஆட்டை விநியோகமும் இடம்பெறும் எனவும் இவர்கள் 15 ஆம் திகதிக்குமுன் தமது பொருள்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் சங்கத்தின் பதில் பொதுமுகாமையாளர் கேட்டுள்ளார்.

### புதிய கடற்படை

பதவியில் இருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து புதிய கடற்படைத்தளபதியாக இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் றோயல் கடற்படைக் கல்லூரியில் பயிற்சி பெற்ற ஆனந்த சில்வா சேவைக்காலத்தில் ஆற்றிய சேவையைப் பாராட்டி சிறிலங்கா ஜனாதிபதி அட்மிரல்

## மூதாட்டி சிரமப்படுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மூதாட்டி ஒருவர் உறவினர்களின் தொடர்பற்றநிலையில் கஷ்டப்படுவதாக யாழ் தேசவாளர் நலன்புரிச் சங்கம் அறிவித்துள்ளது.

[illegible] ப குதியைச் சேர்ந்த அன்னம்மா [80] என்ற [illegible] இவ்வாறு கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 ஆம் வார்ட்டில் சிகிச்சை பெற்றுவரும்இவர் மாற்றுடை கூட அணிய முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது (நி)

### நரசிம்மராவ்

நாடு திரும்பிவிடுவார் என பதை நேற்று கொழும்பில் அரச அதிகாரிகளும் உறுதி செய்திருக்கிறார்கள்.

### கையிருப்பை

தங்களும் தமது தேவைக்கு மேற்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை வைத்திருக்கும் ஏனையோரும்தமது கையிருப்பை நாளை சனிக்கிழமை நண்பகல் 12.00 மணி

தமிழக அரசிற்கு இதற்காக

இலங்குவில்

இத் திட்டத்தின் கீழ் கிராம சேவையாளர்கள் பிரிவுகள் தோறும் பாவனையாளர்களுக்கு வசதியாக அமைந்த கடையொன்று இரவு எட்டு மணிவரை திறந்திருக்கும்.

இதேவேளை கொப்பிக்குச் சாமான் வாங்கும் மாதச் சம்பளக்காரர்களுக்குப் பயன் பொருத்தமான சில ஒழுங்குகள் கூட்டுறவு மற்றும் உத்தரவு பெற்ற வியாபாரிகளுடன் செய்து தரப்படவுள்ளன. இதன் பிரகாரம் கொப்பிக்கு சாமான் வாங்குபவர்கள் வழமைபோல் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம்.

சமச்சீரான வருமானமற்ற மக்கள் பகுதிபகுதியாக ஒரு கிழமையில் அல்லது ஐந்து நாட்களில் தமது பொருள்களைப் பங்கீட்டு அட்டைக்குப் பெற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில்

பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கலந்துகொள்ளவிருக்கும் பிரதிநிதிகளின் சுகவைத்திய சேவைகளையும் கவனிப்பதற்குச் சுகாதார அமைச்சு கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

கொழும்பில் மட்டும் பாதுகாப்பிற்காக 10,000 மேலதிக பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்றும்; கண்டியில் 3000 பேரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

னர் என்றும், 100 பேர் வரை காயமடைந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூர் ரயில் நிலையத்தில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை 6.25க்குப் புறப்பட்ட கர்நாடக எக்ஸ்பிறஸ் ரயில் இரவு 8 மணியளவில் பாறாங்

35 பேர் வரையில் உயிரிழந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் முழுதாகச் சேத விபரங்களை அறிவிக்க முடியாது என்றும் கர்நாடகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## லொறி விபத்தில் கணவன் மனைவி பலி

வவுனியா புளியங்குளம் பகுதியில் லொறி மோதி கணவனும் மனைவியும் ஸ்தலத்திலேயே பலியானார்கள். இவர்களது மகள் கவலைக்கிடமான நிலையில் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு புளியங்குளம் பிரதான வீதியில் இவ்விபத்து இடம்பெற்றதாக தெரியவருகிறது.

இறந்தவர்கள் புளியங்குளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அவர்களின் பெயர் விபரங்கள் அறியப்படவில்லை. (தி)

வெளிமாவட்ட

பட்டுள்ளன.

விசேட அனுமதியின் பெயரில் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பங்கீட்டு அட்டை இல்லாத மாணவர்கள் தத்தமது நிர்வாகத்திடம் மேற்படி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

தேநீர்க்

தற்கு வழங்கப்படவுள்ளது.

இவர்கள் பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களிடம் இதற்கான அனுமதியைப் பெற்று இதற்கென நியமிக்கப்பட்ட வர்த்தகர்களிடம் உரிய பொருள்களைப் பெறலாம்.

மற்றும் குழந்தைகள் பருகும் லக்ரோஜன் பால்மா வகைகளையும் கிராமசேவையாளரின் சிபார்சின்பேரில் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சமாதானமா

முனர்களின் போக்குவரத்திற்காக விமானப்படை உலங்கு வானூர்திகளும் பயன்படுத்தப்படவுள்ளன. இதன் காரணமாகவே சார்க் மாநாடு முடியும் வரை இராணுவ நடவடிக்கைகளை அரசு தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது. அத்துடன் வலம்புரி இராணுவ நடவடிக்கையின் தந்திரோபாயங்கள் வெற்றியளிக்காததும் இந்த இடை நிறுத்தத்திற்கு இன்னொரு முக்கிய காரணமாகும். இதற்கிடையில் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக தமிழர் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணும் முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொள்ளலாமெனவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

முதலில் 500 பேர் வீதமும் பின்னர் ஒரேதடவையில் 2000 பேர் வரை அனுப்பப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது

திருமணம்

கூடியதாக இருக்கும்.

பாவனையாளர் பாதுகாப்புக் குழுவுடன் தொடர்பு கொண்டு 100 பேருக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களுக்கான அனுமதியைப் பெறலாம்.

வெளியுறவுச்

மண்டபத்தில் இடம்பெற்றது தீர்மானங்களை வரைவது இக்குழுவின் பொறுப்பு ஆகும்.

இக்குழுவினர் நிறைவேற்றும் தீர்மானங்கள் சகல அங்கத்துவ நாடுகளினதும் வெளியுறவுச் செயலாளர்களினாலும், வெளியுறவு அமைச்சர்களினாலும் ஆராயப்படும்.

விவசாயம், கல்வி, போதைவஸ்துகடத்தல்போதைவஸ்து துஷ்பிரயோகம் என்பவற்றைத் தடுத்தல், தொலைத்தொடர்புகள், சுற்றுலா, அபிவிருத்தியில் மகளிர், என்பன உட்பட பதின்மூன்று விடயங்கள் இக்குழுவினால் ஆராயப்படவுள்ளன. இவை தொடர்பான தீர்மானங்களும் வரையப்படவுள்ளன.

இக்குழுவினர் எடுக்கும் தீர்மானங்கள் திங்களன்று நடைபெறும் வெளியுறவுச் செயலாளர்களின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப் படும் பின்னர் 5ஆம் 6 ஆம் திகதிகளில் நடைபெறும் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பரிசீலனைசெய்யப்படும்.

ஏழாம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பிக்கும் அரசுத் தலைவர்களின் மாநாடு ஒன்பதாம் திகதி நிறைவெய்தும் அப்போது தீர்மானங்கள் கூட்டுப் பிரகடனங்களாக வெளியிடப்படும்.

பெற்ற ஆனந்தசிவா சேவைக்காலத்தில் ஆற்றிய சேவையைப் பாராட்டி சிறிலங்கா ஜனாதிபதி அட்மிரல் பதவியை வழங்கியிருந்தார்.

வலம்புரியின்

குறைத்தல் என்பது தொடர்பாகத் தீவிர ஆலோசனையில் இராணுவ வட்டாரங்கள் ஆலோசிப்பதாகவும் தெரியவருகிறது.

உணவுப்

பதற்கு புதிய பங்கீட்டுமுறை செயலுக்கு வரவுள்ளது இது நியாயமான விலையில் எல்லோருக்கும் உணவு கிடைப்பதற்கான ஒரு வழியாகும் என்றார் அவர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

பெரிய தனியார் வர்த்தக நிறுவனங்கள் மற்றும்சிறு வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் கையிருப்பு விபரத்தை தெரிவிக்கும்படி கோரப்பட்டுள்ளார்கள். அத்துடன் இந்த நிறுவனங்கள் தங்கள் கையிருப்புப்பட்டியலை பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களிடம் கையளிக்கும் படியும் பணிக்கப்பட்டுள்ளார்கள் இது ஒரு தற்காலிக ஒழுங்காகும் காலநிலை, வேறு நெருக்கடிகள் காரணமாகக் கூட்டுறவுக் கடைகள், உத்தரவு பெற்ற வியாபாரிகளிடம் கையிருப்பு குறையும்போது பெரிய, சிறிய வர்த்தக நிறுவனங்கள் அத்தியாவசியப் பொருள்களை தீர்மானிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்கள் இயங்கும் பாவனையாளர் குழுவில் உதவி அரசாங்க அதிபர் பிரஜைகள் குழு சார்பில் ஒருவர், பாவனையாளர் சார்பில் ஒருவர், வர்த்தகர்கள் சார்பில் இருவர், கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி ஒருவர் அங்கம் வகிப்பர். இந்தக் குழு உதவி அதிபர் பிரிவில் எல்லா மக்களுக்கும் சீராக உணவு கிடைக்கிறது என்பதையும் மக்கள் பட்டினி கிடக்காமல் இருப்பதையும் உறுதிப்படுத்தும் கிராம மட்டங்களில் இருந்தும் சனசமூக நிலையம் போன்ற பொது அமைப்புகள் கிராம சேவையாளர்களை உள்ளடக்கியதான குழுக்கள் அமைக்கப்பட்டு பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களுடன் இணைக்கப்பட்டு கிராம மட்டத் தொடர்பும் ஏற்படுத்தப்படும்.

அத்தியாவசியப் பொருள்களான அரிசி, மா, தேயிலை பருப்பு, சீனி ஆகியன குடும்ப அட்டைக்கு கூட்டுறவுச்சங்கம் அதிகாரமளிக்கப்பட்ட கடைகள் மூலமாக வழங்கப்படும்.

பற்றாக்குறையாக உள்ள பொருள்களுக்கு மாற்று வழிகள் அறிமுகப்படுத்தப்படும். அத்துடன் இப்புதிய விநியோகத்திட்டம் பற்றித் தொண்டர்கள் கிராமம் கிராமமாக விளக்கம் தருவார்கள்.

சங்குப்பிட்டித் துறைக்கு இராணுவம் வந்தது என்றவுடன் செயற்கையான பதுக்கல்களும் விலையேற்றங்களும் ஏற்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

உணவுப் பொருள்களை வைத்திருக்கும் ஏனையோரும் தமது கையிருப்பை நாளை சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஒப்படைக்கத் தவறும் பொருள்கள் பதுக்கல்பொருள்களாகக் கருதப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.